கர்நாடக அணைகளில் இருந்து நீர்வரத்து அதிகரிப்பு! மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் திறப்பை நீர்வளத் துறை அலுவலர்கள் சீரான முறையில் மேற்கொள்வீர்! திறந்து விடப்படும்

# மேட்டூர் அணை நீரை விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வீர்!

## நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை

**சென்னை, ஜூலை 28-**

**மேட்டூர் அணைக்கு கர்நாடக அணையிலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளதாலும், அணையின் முழு கொள்ளளவான 120 அடியில் உள்ளதாலும், நீர்வளத்துறை அலுவலர்களால் உபரி நீர் திறந்து விடுவதை சீரான முறையில் அனுப்பிடவும், அந்நீரினை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**



**அவரது அறிக்கை வருமாறு:-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.06.2025 அன்று மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக நீர் திறந்த விடப் பட்டதுடன், மேட்டூரிலிருந்து திறந்த விடப்பட்ட நீர் கல்லணை வந்தவுடன், கல்லணை மதகுகளையும் 15.06.2025 அன்று திறந்து வைத்து, நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென விவசாயிகளை அறிவுறுத்தினார்கள்.

**தூர்வாரும் பணிகள்!**

முன்னதாக, இந்த ஆண்டு 98 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பாசனத்திற்கு நீரைக் கொண்டு செல்லத் தேவையான தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டதனால் கடைமடைப் பகுதிகளுக்கும் பாசன நீரானது சென்றுள்ளது. பயிர் சாகுபடி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கர்நாடக அணையிலிருந்து குறிப்பாக கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளிலிருந்து அதன் நீர்பிடிப்பு பகுதியில் மழைபொழிவு அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று முதல் வினாடிக்கு 35000 கனஅடி முதல் 70000 கனஅடி வரை அதிகரித்துள்ளது.

**வெள்ள அபாய எச்சரிக்கை!**

இன்று 27.07.2025 மாலை 4.00 மணி நிலவரப்படி 75400 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் முழுக்கொள்ளளவான 120 அடியில் உள்ளது, இச்சூழலில் 16 கண் மதகுகள் வழியாக உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான வெள்ள அபாய எச்சரிக்கையினை விடுக்க சம்பந்தப்பட்ட நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும் கிடைக்கும் உபரி நீரை முறை சார்ந்த குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பிவிட்டு நீரை முடிந்த அளவு சேமிக்க நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**முழு கொள்ளளவு!**

மேட்டூர் அணையானது கடந்த நான்கு பாசன ஆண்டுகளில் 2021-2022, 2022-2023 மற்றும் 2024-2025-இல் அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. கடந்த 2024-2025-ஆம் ஆண்டில் 30.07.2024, 12.08.2024 மற்றும் 31.12.2024 ஆகிய நாட்களில் முழுக்கொள்ளளவை (120.00 அடி) எட்டியது. இந்த ஆண்டில் ஜூன் மாதம் 29.06.2025 தேதியிலும், ஜூலை மாதத்தில் 05.07.2025, 20.07.2025, மற்றும் 25.07.2025 தேதிகளில் முழுக்கொள்ளளவை (120அடி) எட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது. பொதுமக்கள் வெள்ள அபாய எச்சரிக்கையை கருத்தில் கொண்டு விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவ்வறிக்கையில் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரணிபுத்தூர், கெருகம்பாக்கம் ஊராட்சிகளில் நெடுஞ்சாலைத் துறை – நீர்வளத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கால்வாய்களை துறை சார்ந்த அலுவலர்களுடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆய்வு மேற்கொண்டார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில்

# மடிப்பாக்கம் 187வது வட்டத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. - கழகத்தினர் பங்கேற்பு!

*சென்னை, ஜூலை 28-*

சென்னை தெற்குமாவட்டம் சோழிங்கநல்லூர் மேற்குப்பகுதி, மடிப்பாக்கம் அ.தி.மு.க.வை சார்ந்த சென்னை புறநகர் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர், முன்னாள் வார்டு உறுப்பினர் டி. சந்திரசேகர்,

அண்ணா தொழிற்சங்க ஓட்டுனர் அணி பகுதி துணைச் செயலாளர் என். கோகுலகிருஷ்ணன், வட்ட அம்மா பேரவை செயலாளர், முன்னாள் வார்டு உறுப்பினர் பி.உதயகுமார், பகுதி இளைஞர், இளம் பெண்கள் பாசறை இணைச்செயலாளர்கார்த்திக், மாவட்ட அம்மா பேரவை துணைச்செய லாளர்ஜெயராஜ் ஆகியோர் மடிப்பாக்கம் 187 வது வட்ட அ.தி.மு.க.வில் இருந்து தங்களை விடுவித்து கொண்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

இந்நிகழ்வில் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., பகுதிச்செயலாளர் எஸ்.வி. ரவிச் சந்திரன், 187 வது வட்ட தி.மு.க. செயலாளர் எம்.கே. ஜெய், மாவட்டப் பிரதிநிதி எம்.கே. ராமகிருஷ்ணன், ஈஸ்வர மூர்த்தி, திலகவதி, ஹரிகிருஷ்ணன், அருண்குமார், விவேக், சுரேஷ், விசுவநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

புதுச்சேரி கழக வழக்கறிஞர் அணி -

# கடலூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

***சென்னை, ஜூலை 28-***

***தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைக்கினங்க வருகின்ற 01/08/2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி மற்றும் பாண்டிச்சேரி கழக வழக்கறிஞர் அணி பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெறும் என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.***



***அவரது அறிக்கை வருமாறு :-***

*முதலமைச்சர் கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க வருகின்ற 01/08/2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி மற்றும் பாண்டிச்சேரி திமுக வழக்கறிஞர் அணியின் பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி கலந்து கொண்டு 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தல் சம்பந்தமாக பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்க உள்ளார்.*

*அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த வழக்கறிஞர் அணி மாவட்ட, மாநகர மற்றும் நீதிமன்ற கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் மண்டல நிலை ஒருங்கிணைப்பாளர் (ZLC), கழக மாவட்ட நிலை ஒருங்கிணைப்பாளர் (DLC), சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC), கழக ஒன்றிய நிலை ஒருங்கிணைப்பாளர் (ULC), கழக நகரம் / பேரூர் நிலை ஒருங்கிணைப்பாளர் (TLC), கழகப் பகுதி நிலை ஒருங்கிணைப்பாளர் (DivLC), முன்னணி (அ) முதல் நிலை ஒருங்கிணைப்பாளர் (FLC) மற்றும் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.*

மூத்த குடிமக்களுக்கான ‘ஆயுஸ்மான்’

# மக்கள் சுகாதாரத் திட்டம், தமிழ் நாட்டில் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா?

## மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 25 ஜூலை 2025 அன்று மக்களவையில், 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான ஆயூஸ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் சுகாதாரத் திட்டம், தமிழ்நாட்டில் முறையாகச் செயல்படுத்த படுகிறதா? என்றும், மத்திய அரசின் சுகாதாரத் திட்டத்தின் பயனாளிகளும் ஆயூஸ்மான் திட்டத்தில் சேர இயலுமா? என்றும், இதற்கான நிதி ஒதுக்கீடு விவரங்களை தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.*



*ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :*

*எழுபது வயதிற்கும் மேற்பட்ட17 இலட்சத்திற்கும் அதிகமான, மூத்த குடிமக்களுக்கு, தமிழ்நாட்டில், ஆயூஸ்மான் வந்தனா அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மத்தியி அரசின் சுகாதார திட்ட பயனாளிகள், தேவைப்பட்டால் இந்த புதிய திட்டத்திற்கு தங்கள் பெயரை மாற்றிக் கொள்ளலாம் என்றும், ஆனால் ஏதாவது ஒரு திட்டத்தில் தான் மூத்த குடிமக்கள் சேர இயலும்.*

*மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான மூத்த குடிமக்கள் சுகாதாரத் திட்டத்திற்கு தமிழ் நாட்டிற்கென ரூபாய் 2165 கோடிகள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப, தேசிய சுகாதார ஆணையம் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யும்.*

*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.*

# அனந்தபுரம் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, ஜூலை 28-*

*தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் பேரூராட்சியில் தொடங்கப் பட்டது.*

*அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா கல்யாண் குமார் முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசி அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.*

*தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை அவர் வழங்கினார். மேலும் பொதுமக்களின்கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக அதிகாரிகள் தீர்வு காணப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். 1வார்டு முதல் 7வது வார்டு வரை உள்ள பொது மக்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பங்கேற்று குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம், முதியோர் ஒய்வூதியம் கேட்டு மனு செய்தனர்.*

ஞான.இமையநாதன் தலைமை! எம்.கே.மருது, டி.ராஜ்குமார் பங்கேற்பு!

# மயிலாடுதுறை - உளுத்துக்குப்பையில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் - திருப்பத்தூர் ரஜினி – இரா.மதுமிதா சிறப்புரை!

மயிலாடுதுறை. ஜூலை. 28–

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சார கூட்டம் உளுத்துக்குப்பை கடைவீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழக செயலாளர் ஞான.இமையநாதன் தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வி.ஜான் (எ) ஜான்சன் வரவேற்றார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, ஒன்றிய அவைத்தலைவர் வி.பன்னீர் செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கவி.கார்த்திகேயன், சுப.சிற்றரசன், சந்திரவடிவமராஜா, பொருளாளர் கோ.மோகன், மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.கண்ணன், , மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் டி.ராம்குமார், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இ.நூருதீன், க.முருகன், ரா.நந்த கோபாலகிருஷ்ணன், பா.பிரபாகரன், ஆ.முத்துக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர் திருப்பத்தூர் ரஜினி, இளம் பேச்சாளர் இர.மதுமிதா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக பொருளாளர் கண்ணகிபன்னீர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பானார்கோயில் மத்திய அமிர்த.விஜயகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கோ.அசோக் குமார் நன்றி கூறினார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள சின்னம்மன் கோவிலில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சியில் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி பின்னர் பொதுமக்கள் சாப்பிட்ட இலைகளை சுத்தம் செய்தார் அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல குழு தலைவர் ராஜேந்திரன், மாநில சிறுபான்மை அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, பகுதி செயலாளர் பொன் விஜயன், மாமன்ற உறுப்பினர் சத்யா கோ.ரவி, பாலா யுவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மேற்கு சட்டமன்ற தொகுதி பழங்காநத்தம் பகுதிக்குட்பட்ட 74 வது வட்டப் பகுதியில் வசிக்கும் சுமார் 2500 குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர் எஸ்.வி.சுதன், வட்டச் செயலாளர் சௌந்தர்ராஜன், சம்மட்டிபுரம் பகுதி செயலாளர் தவமணி, வட்டச் செயலாளர்கள் முனியாண்டி, ராஜேஷ், மாமன்ற உறுப்பினர்கள் அமுதா தவமணி, நாகநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி மதுரை பாலா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், ஆயிரக்கணக்கான பயனாளிகள் பங்கேற்றனர்